### பெரும்பான்மை மக்கள் உணவுக்குத் தவித்த காலத்தில் அவர்தம் வயிறு நிறைய

# வேளாண்மையில் மாபெரும் புரட்சி நடத்தியவர் எம்.எஸ்.சுவாமிநாதன்!

## நூற்றாண்டு நினைவஞ்சலி நிகழ்ச்சியில் – முதல்வர் மு.க.ஸ்டாலின் புகழாரம் !

**சென்னை, செப்.28 -**

**“பெரும்பான்மை மக்கள் உணவுக்குத் தவித்த காலத்தில் அவர்தம் வயிறு நிறைய வேளாண்மையில் மாபெரும் புரட்சி நடத்தியவர் எம்.எஸ்.சுவாமிநாதன் அவர்கள்” என்று அவரது நூற்றாண்டு நினைவஞ்சலி நிகழ்ச்சியில் உரையாற்றும்போது முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் புகழாரம் சூட்டினார்.**

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (27.9.2025) சென்னை, தரமணி, எம்.எஸ்.சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனத்தில் நடைபெற்ற பேராசிரியர் எம்.எஸ். சுவாமிநாதன் நூற்றாண்டு நினைவஞ்சலி நிகழ்ச்சியில் கலந்து கொண்டு ஆற்றிய உரை வருமாறு:-

வரலாற்றில் ஒரு சிலர்தான் பல கோடி பேர் மீது தாக்கம் செலுத்தும் வாழ்வை வாழ்ந்திருக்கிறார்கள். அப்படி ஒருவராக விளங்கிக் கொண்டிருக்கக்கூடிய எம்.எஸ். சுவாமிநாதன் அவர்களுடைய நூற்றாண்டு விழாவில், கலந்து கொண்டு உரையாற்றக்கூடிய வாய்ப்பைப் பெற்றமைக்கு நான் உள்ளபடியே பெருமைப்படுகிறேன், மகிழ்ச்சி அடைகிறேன், அதற்காக என் நன்றியைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

**எம்.எஸ்.சுவாமிநாதன் பெயரை இந்தியா நிச்சயம் மறக்காது!**

நாட்டின் பெரும்பாலான மக்கள், பட்டினியால் காய்ந்தும் கால் வயிறும் அரை வயிறும் சாப்பிட்டுத் தவித்த காலத்தில், மக்களின் வயிறு நிறைய, மாபெரும் புரட்சி நடத்திய எம்.எஸ். சுவாமிநாதன் அவர்களுடைய பெயரை இந்தியா என்றைக்கும் நிச்சயம் மறக்காது!

தலைவர் கலைஞரோடு நெருக்கமான நட்பு கொண்டவர் நம்முடைய வேளாண் விஞ்ஞானி சுவாமிநாதன் அவர்கள். பலமுறை அவரைச் சந்திக்கக்கூடிய வாய்ப்பு எனக்கும் கிடைத்திருக்கிறது. மிக எளிமையாகப் பழகக்கூடியவர்!

கடைக்கோடி கிராமத்தில் இருக்கக்கூடிய ஒரு விவசாயிடமும் அதே எளிமையுடன், மரியாதையுடன் பேசக்கூடியவர்! அதுவும் ‘பாரத ரத்னா’ எம்.எஸ். சுவாமிநாதன் அவர்கள், 2021ஆம் ஆண்டு M.S.S.R.F. சார்பில் நடந்த பன்னாட்டுக் கருத்தரங்கைத் தொடங்கி வைத்து, நான் அவரைப் பாராட்டிப் பேசியிருக்கிறேன். அவரும் என்னை வாழ்த்தி, பாராட்டியிருக்கிறார்; பல்வேறு ஆலோசனைகளை என்னிடத்திலும் அவர் வழங்கியிருக்கிறார். ஆனால், இன்று அவர் நம்மிடத்தில் இல்லை என்கின்ற வருத்தம் என்னைப் பொறுத்தவரையில், நிச்சயமாக இருந்து கொண்டிருக்கிறது.

**குரலற்றோரின் குரல்! எளிமையின் உருவம்!**

“இந்திய பசுமைப் புரட்சியின் தந்தை” என்று உலகமே அவரை அழைத்தாலும், நமக்கு அவர், உணவுப் பாதுகாப்பின் காவலராகவும், குரலற்றோரின் குரலாகவும், எளிமையின் உருவமாகவும் அவர் இருந்தார். தான் கொண்ட அறிவை, தான் கற்ற அறிவியலை, மக்களின் பசியைப் போக்குவதற்கு பயன்படுத்திய, தொலைநோக்குச்சிந்தனையாளர் எம்.எஸ்.சுவாமிநாதன் அவர்கள்!

இன்றைக்கு உலகமே பேசக்கூடிய அளவுக்கு, காலநிலை மாற்றம் குறித்து 50 ஆண்டுகளுக்கு முன்பே அவர் பேசியிருக்கிறார். இன்றைய இளைய தலைமுறையினர்



பலருக்கும், ஐம்பது, அறுபது ஆண்டுகளுக்கு முன்னால் நாடு இருந்த நிலைமை தெரிய வாய்ப்பில்லை!

**இந்தியாவின் வறுமை தீர - எம்.எஸ்.சுவாமிநாதனின் பசுமைப்புரட்சி!**

விடுதலைக்குப் பிறகு, இந்தியாவைக் கட்டமைத்துக் கொண்டிருந்த காலம் அது! மக்களின் உணவுத் தேவை அவ்வளவு எளிதாகப் பூர்த்தி அடையவில்லை. பசியால் பலர் இறந்தார்கள்! அந்த நிலைமையெல்லாம், இன்றைக்கு மாறியிருக்கிறது என்றால், அதற்கு, எம்.எஸ். சுவாமிநாதன் அவர்கள் முன்னெடுத்த “பசுமைப் புரட்சி”தான் முக்கிய காரணம்!

அதுமட்டுமல்ல, இந்த வளர்ச்சியுடன் வந்த விளைவுகளைப் பற்றியும், ஒரு அறிவியலாளராக எடுத்துச் சொல்லி அவர் கவலைப்பட்டார். கெமிக்கல் உரங்களின் நச்சுத்தன்மையால் நிலம் எப்படிப் பாழாகிறது என்றெல்லாம் தெளிவாக எடுத்துச் சொல்லி, “வயிறு நிரம்பினால் மட்டும் போதாது, நாம் வழங்குகின்ற உணவு சத்தானதாவும், நிலையானதாகவும் இருக்கவேண்டும்” என்று சொன்னார்.

**ஆற்றலுள்ள பயிர்களை கண்டறியப் பாடுபடுவீர்!**

இங்கே பல அறிவியலாளர்களும், அவருடைய ஆராய்ச்சி அறக்கட்டளையைச் சேர்ந்தவர்களும் இருக்கிறீர்கள். அவருடைய கனவுகளை நனவாக்குகின்ற பணிகளில் நீங்கள் தொடர்ந்து ஈடுபட வேண்டும். சத்தான, அதேசமயம் பெரும் மக்கள் தொகையின் தேவையைத் தீர்க்கும் ஆற்றலுள்ள பயிர்களைக் கண்டறிய நீங்கள் எல்லாம் பாடுபடவேண்டும்!

வேளாண்மைக்கான நவீனக் கருவி களை குறைந்த விலையில் உழவர்களிடம் கொண்டு சேர்க்கின்ற பணியையும் நாம் செய்தாக வேண்டும்! இதற்கெல்லாம் அடித்தளமாகத்தான், நம்முடைய திராவிட மாடல் ஆட்சியில், வேளாண்மைக்கு என்று தனி நிதிநிலை அறிக்கையைத் தாக்கல் செய்து கொண்டு வருகிறோம். அதுவும், இந்த ஆண்டு வேளாண்மை பட்ஜெட்டில், வேளாண்மையில், புதிய கண்டுபிடிப்பு களுக்கான “டாக்டர் எம்.எஸ். சுவாமிநாதன் ஆராய்ச்சி நிதி” உருவாக்கப்படும் என்று அறிவித்து, அதற்காக ஒரு கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்திருக்கிறோம் என்பது குறிப்பிடத்தக்கது!

> **“இந்திய பசுமைப் புரட்சியின் தந்தை” என்று உலகமே அவரை அழைத்தாலும், நமக்கு அவர், உணவுப் பாதுகாப்பின் காவலராகவும், குரலற்றோரின் குரலாகவும், எளிமையின் உருவமாகவும் அவர் இருந்தார். தான் கொண்ட அறிவை, தான் கற்ற அறிவியலை, மக்களின் பசியைப் போக்குவதற்கு பயன்படுத்திய, தொலைநோக்குச் சிந்தனையாளர் எம்.எஸ்.சுவாமிநாதன் அவர்கள்!**

**உழவர்களின் உணர்வுப்பூர்வமான உறவைப் பேணி வருகிறோம்!**

எப்படி சுவாமிநாதன் அவர்கள், உழவர்களின் உரிமைக்காகவும், நன்மைக் காகவும், நலனுக்காகவும் செயல்பட்டாரோ, அப்படித்தான் நம்முடைய அரசும், உழவர் களின் உணர்வுப்பூர்வமான உறவைப் பேணி, அவர்களுக்கான பல திட்டங்களை தொடர்ந்து நிறைவேற்றிக் கொண்டு வருகிறது.

**எங்களுடைய முயற்சிகளுக்கு அறிவியலாளர்கள் துணை நிற்பீர்!**

இப்போது கூட இந்த நிகழ்ச்சியை முடித்துவிட்டு, அடுத்ததாக, சென்னை வர்த்தக மையத்தில் நடைபெறக்கூடிய வேளாண் வணிகத் திருவிழா இரண்டு நாட்கள் நடைபெற இருக்கிறது அதைத் தொடங்கி வைப்பதற்கு இங்கிருந்து நான் நேரடியாக அங்கு செல்ல இருக்கிறேன்.

“மண்ணுயிர் காத்து மன்னுயிர் காக்கும்” எங்களுடைய முயற்சிகளுக்கு அறிவியலாளர்களும் துணை நிற்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். நிச்சயம் நீங்கள் எல்லாம் துணை நிற்பீர்கள் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது!

நம் எல்லோருடைய நெஞ்சங்களிலும் நிறைந்து வாழக்கூடிய எம்.எஸ்.சுவாமி நாதன் அவர்களுடைய வழியில், சவுமியா சுவாமிநாதன் அவர்களும் சிறப்பாகப் பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள்.

“ஒன்றிய அரசு இந்திய அளவில், 2070க்குள் கார்பன் பயன்பாட்டைக் குறைக்க திட்டமிட்டு இருக்கக் கூடிய இந்த நிலையில், தமிழ்நாடு 2050ஆம் ஆண்டுக்குள்ளே அதை நிறைவேற்ற முயற்சி செய்கிறது” என்று, நம்முடைய நல்ல முன்னெடுப்பு களுக்கு ஆதரவாகப் பேசி துணையாக இருக்கிறார்கள். அவர்களுக்கும் இந்த நேரத்தில் என்னுடைய வாழ்த்துகளையும், பாராட்டுக்களையும் நான் தெரிவித்துக் கொள்கிறேன்!

**போரூர் பசுமைப் பூங்காவுக்கு எம்.எஸ்.சுவாமிநாதன் பெயர்!**

இந்தியாவின் எதிர்காலத்தை வடிவமைத்த ஆளுமைகளில் ஒருவரான எம்.எஸ்.சுவாமிநாதன் அவர்களை பெருமைப்படுத்தும் வகையில், நம்முடைய திராவிட மாடல் அரசில், போரூர் ஈரநிலப் பசுமைப் பூங்காவுக்கு எம்.எஸ்.சுவாமிநாதன் அவர்களுடைய பெயரைச் சூட்டி திறந்து வைத்திருக்கிறோம்.

மேலும், தஞ்சாவூர் மாவட்டம் ஈச்சங்கோட்டையில் இருக்கின்ற வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், ‘டாக்டர். எம்.எஸ். சுவாமிநாதன் வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம்’ என்று அழைக்கப்படும் என்று அறிவித்திருக்கிறோம்.

அதேபோல, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் மாணவர்களுக்கு டாக்டர் எம்.எஸ். சுவாமிநாதன் பெயரில், ஆண்டுதோறும் விருது வழங்கப்படும் என்று சொல்லியிருக்கிறோம்.

**எம்.எஸ்.சுவாமிநாதனின் வாழ்வும் தொண்டும் நமக்கு வழிகாட்டும்!**

கடந்த ஆகஸ்ட் மாதம், டெல்லியில் நடைபெற்ற ‘பாரத ரத்னா’ எம்.எஸ். சுவாமிநாதன் அவர்களின் நூற்றாண்டு நினைவு பன்னாட்டு மாநாட்டில், அமைச்சர் தங்கம் தென்னரசு அவர்கள் தமிழ்நாடு சார்பாகக் கலந்து கொண்டு, சுவாமிநாதன் அவர்கள் குறித்த புத்தகத்தையும் வெளியிட்டார்.

உழவர்களின் நலனைப் பாதுகாத்து, சிறப்பான எதிர்காலத்தையும் உருவாக்குகின்ற நம்முடைய பணிகளுக்கு எம்.எஸ். சுவாமிநாதன் அவர்களின் வாழ்வும், தொண்டும் நமக்கு என்றென்றும் வழிகாட்டும்!

வாழ்க எம்.எஸ்.சுவாமிநாதன் அவர்களது புகழ் என்று கூறி, வேளாண்மையையும், உழவர்களையும் எந்நாளும் பாதுகாப்போம் என்றுஉறுதிகூறி,விடைபெறுகிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

---

### அமைச்சர் பி.கே.சேகர்பாபு முன்னிலை! மண்டலக் குழுத் தலைவர் பி.கே.மூர்த்தி தலைமை!

## சென்னை கிழக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் “முன்னேற்றப் பாதையில் முப்பெரும் விழா “ மாபெரும் கருத்தரங்கம்!

### கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி. துவக்கி வைக்கிறார்!

### முனைவர் கு.ஞானசம்மந்தம் – வழக்கறிஞர் சே.மெ.மதிவதனி – தூயவன் (எ) ம.ஜ.சந்தீப் உரையாற்றுகின்றனர்!

சென்னை, செப். 28 -

சென்னை கிழக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் “முன்னேற்றப் பாதையில் முப்பெரும் விழா” மாநிலம் உயரும்!வரலாறு தொடரும்! எனும் தலைப்பில் அம்பத்தூர் சட்டமன்றத் தொகுதியில் மாபெரும் கருத்தரங்கம் (29.09.2025 - திங்கள்கிழமை) மாலை 5 மணியளவில், கிரண் பேலஸ், கொரட்டூரில் நடைபெறுகிறது.

தலைமை செயற்குழு உறுப்பினரும், அம்பத்தூர் மண்டலக் குழுத் தலைவருமான பி.கே.மூர்த்தி தலைமை வகிக்கிறார்.

மாவட்டக் கழகச் செயலாளர், அமைச்சர் பி.கே. சேகர்பாபு, மேயர் பிரியா ராஜன், ஜோசப் சாமுவேல் எம்.எல்.ஏ, டி.எஸ்.பி.இராஜகோபால் எம்.சி, எம்.டி.ஆர்.நாகராஜ், வி.ரமேஷ் (எ) நீலகண்டன் எம்.சி, டாக்டர் ஜி.சாந்தகுமாரி எம்.சி, எல்.பி.எப்.மோகன், டாக்டர் ஏ.பி.பூர்ணிமா எம்.சி, ஜி.வி.நாகவள்ளி எம்.சி, து.ஆயிரம் கு.கிருஷ்ணமூர்த்தி, ஜெ. பாலமுருகன், அ.திராவிடச்செல்வம், க.முரளிபாபு, க.கதிஜா, மா.ரமேஷ், து.ஜெகநாதன், பி.ஆர்.இளங்கோவன், பா.பொற்செழியன், ரா.லட்சுமி ரங்கசாமி, மேனாம்பேடு இ.ராமு, மு. நடராஜன், து.செல்வராஜ், ஆர்.கதிரவன், எஸ்.கவிதா செல்லதுரை, கு.சங்கர் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

வே.ரவீந்திரன், பு.வீரா (எ) வீரராகவன், வெ.ராதாகிருஷ்ணன், மு.இரகு, த. கண்ணபிரான், எம்.கமல் எம்.சி, மு.சண்முகம், ஆ.சுந்தர்ராஜ், சீ.லோகநாதன், சு. மோகன்குமார், மு.விஜய குமார், த.வ.லால், த.பிரகாஷ் குமார், சி.சீனிவாசன், எம்.இ.சேகர் எம்.சி, நா. நெப்போலியன், இரா. டீக்கா, உஷா நாகராஜ் எம்.சி, கே.பொற்கொடி எம்.சி, எஸ்.உமா எம்.சி. ஆகியோர் வரவேற்புரை ஆற்றுகின்றனர்.

கருத்தரங்கத்தை கழகப் பொருளாளர், கழக நாடாளுமன்றக் குழுத் தலைவர் டி.ஆர்.பாலு துவக்கி வைக்கிறார்.

மாநிலம் உயரும்!வரலாறு தொடரும்! தலைப்பில் நடைபெறும் கருத்தரங்கில் முனைவர் கு. ஞானசம்மந்தம், வழக்கறிஞர் சே.மெ.மதிவதனி, திரு. தூயவன் (எ) ம.ஜ.சந்தீப் ஆகியோர் உரையாற்றுகின்றனர்.

இந்நிகழ்ச்சியில் திரு. வி.க நகர் சட்டமன்ற உறுப்பினர் ப.தாயகம் கவி, வில்லிவாக்கம் சட்டமன்ற உறுப்பினர் அ.வெற்றி அழகன், அம்பத்தூர் தொகுதி தேர்தல் பார்வையாளர் சன் பி.முனியாண்டி, ப.ரங்கநாதன், கே.சந்துரு, சி.மகேஷ்குமார், கே.எஸ். ரவிச்சந்திரன், சங்கரி நாராயணன், தமிழன் பிரசன்னா, எஸ்.மணிமுடி, வே.உமாகாந்த், கே.எஸ்.எம்.நாதன், எம்.விஜயகுமார், என்.பி. எம்.ஷேக் அப்துல்லா, பரிதி இளம் சுருதி எம்.சி, ஆர்.வரதன், கோ.ஏகப்பன், தேவஜவகர், ஜி.எம்.தேவன், புனிதவதி எத்திராசன் எம்.சி, இசட்.ஆசாத் எம்.சி, கூ.பீ. ஜெயின் எம்.சி, சரிதா மகேஷ்குமார் எம்.சி, ப.ஸ்ரீராமுலு எம்.சி, மற்றும் பகுதிக் கழகச் செயலாளர்கள், பொதுக்குழு உறுப்பினர்கள், அம்பத்தூர் வடக்கு, கிழக்கு, தெற்கு பகுதி மாவட்டப் பிரதிநிதிகள், அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள், கழக முன்னோடிகள் பாக முகவர்கள் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர்.

84 வது வட்டக் கழகச் செயலாளர்மு.விஜயகுமார், 84 (அ) வட்டக் கழகச் செயலாளர் த.வ.லால் ஆகியோர் நன்றி கூறுகின்றனர்.



கேரள மாநிலம், வைக்கத்தில் உள்ள தந்தை பெரியார் நினைவகம் மற்றும் நூலகத்தையும், நேற்று (27.09.2025) பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு மற்றும் தமிழ்வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் களஆய்வு மேற்கொண்டனர். இந்த ஆய்வின்போது, பொதுப்பணித்துறை முதன்மைத் தலைமைப் பொறியாளர் எஸ்.மணிவண்ணன் மற்றும் துறை சார்ந்த அலுவலர்களும் உடனிருந்தனர்.

---

### புதுடெல்லியில் நடைபெற்றது!

## காவிரி நீர் மேலாண்மை ஆணையத்தின் 44வது கூட்டம்!

### நீர்வளத்துறைச் செயலாளர் ஜெ.ஜெயகாந்தன் ஐ.ஏ.எஸ். கலந்து கொண்டார்!

புதுடெலி, செப். 28-

புதுதில்லியில் நேற்று முன்தினம் எஸ்.கே.ஹல்தார் அவர்கள் தலைமையில் நடைபெற்ற காவிரி நீர் மேலாண்மை ஆணையத்தின் 44வது கூட்டத் தில் தமிழ்நாடு உறுப்பினர் மற்றும் அரசு செய லாளர், நீர்வளத்துறை ஜெ.ஜெயகாந்தன், மற்றும் இரா.சுப்பிரமணியம், தலைவர், காவிரி தொழில்நுட்பக் குழுமம் மற்றும் பன்மாநில நதிநீர்ப் பிரிவு ஆகியோர் சென்னை தலைமைச் செயலகத்திலிருந்து காணொலி காட்சி வாயிலாக கலந்து கொண்டார்கள்.

தமிழ்நாடு உறுப்பினர், தற்பொழுது (25.09.2025) மேட்டூர் அணையின் நீர் இருப்பு 92.105 டி.எம்.சி ஆக உள்ளது என்றும், அணைக்கு நீர்வரத்து வினாடிக்கு 8,419 கன அடியாக உள்ளது என்றும் அணையிலிருந்து வினாடிக்கு 9,033 கன அடி நீர் விவசாயம், குடிநீர் மற்றும் தொழிற்சாலை பயன்பாட்டிற்காக திறந்துவிடப்படு கிறது என்றும் தெரிவித்தார். மேலும், கர்நாடக அணைகளின் நீர் இருப்பு மற்றும் நீர் வரத்து கணிசமான அளவு தொடர்ந்து வருவதினாலும், தமிழகத்திற்கு 2025, அக்டோபர் மாதத்திற்கு வழங்கப் பட வேண்டிய நீர் அளவான 20.22 டி.எம்.சி. நீரினை உச்சநீதிமன்ற ஆணையின்படி கர்நாடகம் பில்லி குண்டுலுவில் உறுதி செய்யுமாறு ஆணையத்தை வலியுறுத்தினார்.

---

### உச்சநீதிமன்றத்தில் வழக்கு நிலுவையில் உள்ளதால் – புதிய வக்ஃப் திருத்தச் சட்டத்தின்படி

## வக்ஃப் வாரியம் திருத்தி அமைக்கப்பட மாட்டாது!

### அமைச்சர் சா.மு.நாசர் திட்டவட்டம்!

சென்னை, செப். 28-

“வக்ஃப் சட்டத்திருத்தம் தொடர்பான வழக்கு உச்சநீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளதால், இவ்வழக்கில் இறுதித் தீர்ப்பு வரை, ஒன்றிய அரசு அவசர அவசரமாக நடைமுறைப்படுத்திய புதிய வக்ஃப் திருத்தச் சட்டத்தின்படி வக்ஃப் வாரியம் திருத்தி அமைக்கப்பட மாட்டாது” என்று சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடுவாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் திட்டவட்டமாக அறிவித்துள்ளார்.

சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத் துறை அமைச்சர் சா.மு. நாசர் அறிக்கை வருமாறு:-

1995 ஆம் ஆண்டு வக்ஃப் சட்டத்தினை ஒன்றிய அரசு திருத்தம் செய்து, ஒருங்கிணைந்த வக்ஃப் மேலாண்மை, அதிகாரமளித்தல், செயல்திறன் மற்றும் மேம்பாட்டுச் சட்டம், 1995னை 08.04.2025 அன்று நடைமுறைப்படுத்தியது.

இச்சட்டத்திற்கு திராவிட முன்னேற்றக் கழகம் தொடர்ந்து எதிர்ப்புத் தெரிவித்து உச்சநீதிமன்றத்திலும் வழக்குத் தொடுத்தது. இதே போல் பல்வேறு தரப்பினரும் இச்சட்டத்தினை எதிர்த்து உச்சநீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்தனர். இவ் வாறு தொடுக்கப்பட்ட இவ்வழக்கில் உச்சநீதிமன்றம் 15.09.2025 அன்று இடைக்கால



தீர்ப்பு வழங்கியுள்ளது.

தற்போது, மேற்கண்ட வக்ஃப் சட்ட திருத்தம் தொடர்பான வழக்கு உச்சநீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளதால், இவ்வழக்கில் இறுதி தீர்ப்பு வரும் வரை, ஒன்றிய அரசு அவசர அவசரமாக நடைமுறைப்படுத்திய புதிய வக்ஃப் திருத்தச் சட்டத்தின் படி, வக்ஃப் வாரியம் திருத்தி அமைக்கப்பட மாட்டாது.

இவ்வாறு அவ்வறிக்கையில் அமைச்சர் சா.மு.நாசர் குறிப்பிட்டுள்ளார்.